## புலமைச் சொத்துக்கள் நிதியம்- 2018

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

புலமைச் சொத்துக்கள் நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தைத் தவிர, நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பான எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.
என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு முகவராண்மையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக முகவராண்மையின் தொடர்ந்து நிலைத்திருந்தல் தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை உள்ளதாக என்பது சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை

மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் முகவராண்மையின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க முகவராண்மை செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக் கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல், தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல், மற்றும் சொத்துக்களுக்கான கணக்களிப் பொறுப்பினைப் பேணுதல் முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்காக கணக்களிப் பொறுப்பினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது இணக்கம் செய்தல், மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்படுத்திலினைப் பெற்றுக்கொள்வதற்குப் போதியளவு ‘‘சிறப்பாகத் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிதியத்தினால் பேணுதல் அவசியமாகும்.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுவதற்கு அமைவாக செலுத்த வேண்டிய முறையே ரூபா 360,241 மற்றும் ரூபா 1,087,949 அட்டுறு செலவாக கணக்கிலிடப்பட்டிருக்க வில்லை | எதிர்வருடம் கணக்கு தயாரிக்கும் போது இச்செலவினங்கள் முன்னைய வருட இலாபத்தில் சீராக்கம் செய்து கணக்கீடு தவறினை சரிசெய்யும் படி கணக்காளரிடம் ஆலோசனை கூறப்பட்டுள்ளது. | சம்பந்தப்பட்ட வருடத்தில் செய்யப்படும் சனல செலவினங்களையும் சம்பந்தப்பட்ட வருடத்திலேயே கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டு கணனி உதிரிப்பாக பராமரிப்பு ஒப்பந்தத்திற்காக 2018 திசெம்பர் 31 ஆந் திகதி செலுத்தப்பட்ட முற்பணமான ரூபா 110,262 மீளாய்வாண்டில் செலவினமாக கணக்கிலிடப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டு கணக்கு தயாரிக்கும் போது முன்னைய ஆண்டின் இலாபத்தினை சீராக்கல் செய்து இத்தவறினை சரி செய்து கணக்கீட்டு பிழையினை சரிசெய்வதற்கு கணக்காளரிடம் ஆலோசனை கூறப்பட்டுள்ளது. | முன்னுக்கு செய்யப்பட்ட செலுத்தல்கள் மீளாய்வாண்டில் செலவினமாக கணக்கிலிடப்படக் கூடாது. |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| 2003 இன் 36 ஆம் இலக்க அறிவுசார் சொத்திற்கான அதிகாரச்சட்டத்தின் 175 ஆம் பிரிவின் கீழான 2006 இன் 01 ஆம் இலக்க அறிவுசார் சொத்தின் கட்டளை 58(10)(ii) பிரிவு | முகவர்களை பதிவு செய்வது சம்பந்தமான 2003 இன் 36 ஆம் இலக்க அறிவுசார் சொத்திற்கான அதிகாரச்சட்டத்தின் 175(5) பிரிவின் பிரகாரம் செல்லுபடிக் காலம் முடிவுற்று 06 மாத காலத்தினுள் விதிக்கப்படும் மேலதிகக் கட்டணத்தைச் செலுத்தி பதிவினை புதுப்பித்துக் கொள்ள முடியுமாயினும், கட்டளை 58 இன் 10(ii) பிரகாரம் பதவி காலம் முடிவடைந்து 02 வாரங்கள் புதுப்பித்தலுக்கான கட்டணம் செலுத்தாது இருந்தால் பத்திரத்திலிருந்து அகற்றப்பட வேண்டியுள்ளதனால் முரண்பாடு ஏற்பட்டுள்ளது. | அதிகாரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை செயல்ரீதியாக அமுல்படுத்தும் போது இனங்காணப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | அதிகாரச் சட்டத்தின் பிரிவுகளுக்கு அமைவாக செயல்பட வேண்டியுள்ளது |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 91,523,739 மிகையாக இருந்ததுடன் அதற்கிணையாக சென்ற ஆண்டில் மிகை ரூபா 75,794,322 ஆக இருந்தது. அதன்படி நிதி விளைவுகளில் ரூபா 15,729,417 க்கான விருத்தி அவதானிக்கப்பட்டது. இவ்விருத்திக்கு வர்த்தக சின்னத்திற்கான வருமானம் ரூபா 6,369,878 யினால் விருத்தி அடைந்தமை மற்றும் முதலீட்டு இலாபபமாக ரூபா 10,355,053 பெற்றமை பிரதான காரணியாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட இழப்புக்கள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்திற்கு உரிய காணியில் அறிவுசார் சொத்து விற்பனை மேம்பாட்டு மையத்தினை நிர்மாணிக்கும் போது அதற்குச் சம்பந்தப்பட்ட காணியை சுற்றுலாத்துறை சம்பந்தமான அபிவிருத்தி செயல்பாட்டுக்காக கையேற்கப்பட்டதனால் அதற்காக செலவின விருத்தி அதிகாரசபையிலிருந்து அறவிடப்படுவதற்கு 2015 மார்ச் 13 ஆந் திகதிய அமப/15/0272/625/007 இலக்க அமைச்சரவை பத்திரத்திற்கான அனுமதி கிடைத்திருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டு இறுதிவரை அப்பணத்தினை அறவிட முடியாது இருந்தது. | அறிவுசார் சொதுக்கான விற்பனை மேம்பாட்டு மையத்திற்காக செலவான செலவினை மீள் செய்வதனை கூ.மொ.வி நிலையத்தால் மறுக்கப்பட்டதனால் பாராளுமன்ற கணக்களிப்புக் குழுவின் ஆலோசனைப்படி நடவடிக்கை எடுக்கப்படும். | செலவினை மீள் நிறைவு செய்தல் அல்லது சட்டஆலோசனைப் படி செயல்பட வேண்டியமை. |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) (i) | மீளாய்வாண்டினுள் பதிவு செய்யப்பட்ட வர்த்தக சின்னங்களின் எண்ணிக்கை 5,192 ஆக இருந்ததுடன் அதனுள் 1992 ஆம் வருடம் முதல் 2007 வரை கிடைக்கப் பெற்ற விண்ணப்பப் | வர்த்தக சின்னமொன்றை பதிவு செய்வது பல கட்டங்களிலான சிக்கல் நிறைந்த காரியமாகும். போதிய அளவிலான பணிக்குழாம் இல்லாமை | வர்த்தக சின்னங்களை பதிவு செய்யும் செயலினை துரிதப் படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | பத்திரங்கள் 625 ஆகும். வர்த்தக சின்னமொன்று 10 வருட காலம் வரை செல்லுபடி ஆவதுடன் மீளாய்வாண்டினுள் பதிவு செய்யப்பட்ட வர்த்தக சின்னங்களுள் உட்பட்டிருந்த 2008 முன் கிடைக்கப்பெற்ற விண்ணப்பப் பத்திரங்கள் அவையினை பதிவு செய்யும் சந்தர்ப்பத்தில் 10 வருட செல்லுபடியாகும் காலமும் முவடிவடைந்திருந்தது. | மற்றும் விண்ணப்ப பத்திரங்கள் கோவைப்படுத்தப்பட்ட திகதி மற்றும் பதிவுச் சான்றிதழ் பெற்றுக் கொடுக்கப்பட்ட திகதிக்கிடையில் அதிக இடைவெளி காணப்படுவதற்கு பல காரணிகள் உள்ளன. | வேண்டும். |
| (ii) | 2018 ஆம் ஆண்டினுள் கிடைத்த விண்ணப்ப எண்ணிக்கை 11,483 ஆக இருந்ததுடன் அவற்றுள் பரீட்சிப்பு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 5,042 மாத்திரமாக இருந்தன. அவற்றுள் வர்த்தமானி அறிவித்தல் செய்யப்பட்ட எண்ணிக்கை 485 ஆவதுடன் 02 விண்ணப்பங்களுக்கான பதிவு சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தன. | முன்னைய வருடங்களில் கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்களுக்கான முன்னுரிமை வழங்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டில் கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்களை பரீட்சிப்பது தாமதமடைந்து காணப்பட்டன. | வர்த்தக சின்னங்களைப் பதிவு செய்தலை விரைவு படுத்துவதுடன் விண்ணப்ப தாரர்களுக்கான சேவை வழங்கலை விரைவுபடுத்த வேண்டியமை. |
| (iii) | மீளாய்வாண்டு ஆரம்பத்தில் பதிவுத் தொடர் வேலைகள் ஆரம்பிக்கப்படாத விண்ணப்பங்களின் எண்ணிக்கை 1752 ஆக இருந்ததாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த அறிக்கைகள் மூலம் அவதானமாவதுடன் மீளாய்வாண்டு முடியும் போது அவ்வெண்ணிக்கை 6446 வரையிலாக விருத்தியாகி இருந்தது. மேலும் 2019 ஆகஸ்ட் 22 ஆகும் போது அது 9690 ஆக விருத்தியடைந்தமை அவதானிக்கப்பட்டது. | வர்த்தக சின்னமொன்றை பதிவு செய்தல் பல கட்டணங்களுக்கான சின்னல் நிறைந்த வேலைத் தொடராகும். போதிய அளவிலான பணிக்குழாம் இல்லாமை மற்றும் விண்ணப்பப் படிவங்களை கோவையிடப்பட்ட திகதி மற்றும் பதிவு சான்றிதழ் வழங்கப்பட்ட திகதி இடையில் அதிக இடைவெளி காணப்படுதல் இதற்கு காரணமாகும். | வர்த்தக சின்ன பதிவு செய்யும் செயற்பாடுகள் நாளதுவரை செய்யப்படல் வேண்டும். |
| (iv) | 2018 ஆம் ஆண்டு முடிவடையும் போது பதிவுக்கான கருமங்களில் பற்பல கட்டங்களில் இருந்த கோவைகளின் எண்ணிக்கை 68,687 ஆனதுடன் மீளாய்வாண்டு இறுதியில் | அறிவுசார் சொத்துக்கான அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக சின்னத்தினை ஏற்றுக் கொள்வது அல்லது ஏற்றுக் கொள்ளாமை | வர்த்தக சின்னங்களை பதிவு செய்யும் அலுவல் நாளதுவரை செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவை 65,169 ஆயின. | மற்றும் விண்ணப்பதாரர்களால் அச்சின்னத்திற்கு பதிவு சான்றிதழ் வழங்குவது வரையில் தொடர்ந்து முன்னெடுப்பது அல்லது எடுக்காமை நிகழக்கூடும். | |
| (v) | 2018 ஆம் ஆண்டினுள் பதிவு வேலைகள் செய்து முடித்த வர்த்தக சின்னங்களின் எண்ணிக்கை 5,192 ஆனதுடன் சென்ற ஆண்டில் பதிவு செய்யப்பட்ட வர்த்தக சின்னங்களின் எண்ணிக்கை 10,622 ஆகும். மீளாய்வாண்டில் முன்னைய ஆண்டினை விட பதிவு செய்யப்பட்ட வர்த்தக சின்னங்களின் எண்ணிக்கை 5430 அதாவது நூற்றிற்கு 51 குறைவாக இருந்தது. | குறிப்பிடத்தக்க சிறிய அளவிலான உத்தியோகத்தர் ஏனைய வேலைக் கட்டணங்களினையும் பூர்த்தி செய்து கொண்டு சான்றிதழ் வழங்கியமையினால் தாமதம் ஏற்பட்டது. | வர்த்தக சின்னங்களை பதிவு செய்யும் அலுவல் நாளதுவரை செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | புதிய கண்டுபிடிப்பாளர் களுக்கான பேடன்ட் பத்திரம் பதிவு செய்தல்<br>---------------------------------------------------- | | |
| (i) | மீளாய்வாண்டினுள் பதிவு செய்யப்பட்ட பேடன்ட் பத்திரங்களின் எண்ணிக்கை 212 ஆக இருந்ததுடன் அவை 2006 முதல் 2017 வரையிலான வருடங்களில் கிடைத்த விண்ணப்பங்களாகும். அதன்படி இப்பேடன்ட் பத்திரங்களை பதிவு செய்வதற்கு 1 வருடம் முதல் 12 வருடங்கள் சென்றிருந்தன. | அவதானிப்பை ஏற்றுக் கொள்கின்றேன். | பேடன்ட் பத்திரங்களை வழங்கும் செயற்பாடு நாளதுவரை செய்யப்படல் வேண்டும். |
| (ii) | பேடன்ட் பத்திரம் வழங்கப்பட்டு அடுத்த வருடம் முதல் அப்பத்திரத்தினை வருடாந்த கட்டணம் செலுத்தப்பட்டு புதுப்பிக்க வேண்டும். ஆயினும், 2018 சனவரி 01 ஆந் திகதி ஆகும் போது பதிவு செய்யப்பட்டுள்ள முழு பேடன்ட் எண்ணிக்கை 4,619 ஆக இருந்த போதிலும், 2018 வருடம் 460 புதுப்பித்தல் மட்டும் செய்யப்பட்டிருந்தது. அது நூற்றுக்கு 10 மாத்திரம் ஆகும். | அவதானிப்பை ஏற்றுக் கொள்கின்றேன். | பத்திரங்கள் பதிவு செய்யப்படும் வேலைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | மீளாய்வாண்டு முடிவடையும் போது பதிவு செய்யும் தொடர் செயற்பாடுகளில் பலதரப்பட்ட கட்டங்களில் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை 4,598 ஆனதுடன் அதனுள் ஆரம்ப கட்ட பரீட்சிப்பு நிலையிலான கோவைகள் 69 உம், புதியனதுக்கான பரீட்சிப்பு செய்யப்பட வேண்டிய கோவைகள் 1,213 உம் வர்த்தமானியில் பிரசுரிப்படுத்த வேண்டிய கோவைகள் 10 உம் சான்றிதழ் வழங்கப்பட வேண்டிய கோவைகள் 19 உம் இருந்தன. | அவதானிப்பை ஏற்றுக் கொள்கின்றேன். | பத்திரங்களை பதிவு செய்யும் செயற்பாடுகளை துரிதப்படுத்த வேண்டும். |
| (இ) | கைத்தொழில் திட்டங்கள் | | |
| (i) | மீளாய்வாண்டினுள் பதிவு செய்யப்பட்ட கைத்தொழில் திட்டங்களின் எண்ணிக்கை 124 ஆக இருந்ததுடன் அவை 2013 முதல் 2018 வருடம் வரையிலான காலத்தினுள் கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்களாகும். அதன்படி இவ்விண்ணப்பங்கள் பதிவு செய்வதற்கு 08 மாதம் முதல் 5 வருட காலம் சென்றிருந்தது. | அவதானிப்பை ஏற்றுக் கொள்கின்றேன். | கைத்தொழில் திட்டங்களை பதிவு செய்யும் வேலைகளை துரிதப்படுத்தல் வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டு முடிவடையும் போது பதிவு செய்யப்படும் தொடர் செயற்பாடுகளில் பலதரப்பட்ட கட்டங்களில் நிலவும் கைத்தொழில் திட்டங்களின் எண்ணிக்கை 1,880 ஆக இருந்தது. அதனுள் ஆரம்ப நிலையில் உள்ள கோவைகள் 89 ஆகும். | அவதானிப்பை ஏற்றுக் கொள்கின்றேன். | கைத்தொழில் திட்டங்களை பதிவு செய்யும் வேலைகளை துரிதப்படுத்தல் வேண்டும். |
| (iii) | அதிகாரச்சட்டத்தின் 46(3) இன் பிரகாரம் கைத்தொழில் திட்டத்தினை பதிவினை புதுப்பித்தல் சம்பந்தமாக வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டியுள்ள போதிலும், ஆண்டினுள் புதுப்பிக்கப்பட்ட 14 கைத்தொழில் திட்டங்கள் சம்பந்தமாக அதற்கமைய செயற்பட்டிருக்கவில்லை. | அதிகாரச்சட்டத்தில் 43(3) பிரிவுக்கமைவாக திருத்த வேண்டியுள்ளதுடன் அதற்கு தேவையான செயற்பாடுகள் நடத்து கொண்டிருக்கின்றன. | அதிகாரச்சட்டத்தின் பிரிவுகளுக் கமைவாக செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | 2018 ஆம் ஆண்டினுள் கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை 288 ஆக இருந்ததுடன் அவற்றுள் 230 ஆரம்ப பரீட்சிப்பு செய்யப்பட்டு முடிக்கப்பட்டிருந்த போதிலும், வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்த எண்ணிக்கை 69 ஆகும். அவற்றுள் 16 பதிவு சான்றிதழ் மட்டும் வழங்கப்பட்டிருந்தது. | அவதானிப்பை ஏற்றுக் கொள்கின்றேன். | பதிவு சான்றிதழ்கள் வழங்கப்படுவதை துரிதப்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | தொழில்நுட்ப மற்றும் புதுக்கண்டுபிடிப்புக்கான மத்திய நிலையங்கள் ஆரம்பித்தல் (TISC)<br>---------------------------------------------------- | | |
| (i) | மீளாய்வாண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட 09 விதாதா மத்திய நிலையங்களில் தொழில்நுட்ப மற்றும் புதுக் கண்டுபிடிப்புக்கான மத்திய நிலையங்களை ஏற்படுத்துவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும், அதற்கு தொலைத்தொடர்பு தொழில்நுட்ப முகவர் நிலையத்தில் (ICTA) மற்றும் இலங்கை பொறியியலாளர் நிலையத்தில் (IESL) மாத்திரம் TISC ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | உருவான நடைமுறைப் பிரச்சினைகளால் விதாதா மத்திய நிலையங்களில் தொழில்நுட்ப மற்றும் புதுக்கண்டுபிடிப்புக்கான மத்திய நிலையங்களை ஏற்படுத்துவதற்கு முடியாது போயிற்று. | திட்டங்களுக்கு அமைவாக செயல்பட வேண்டும். |

### 3.3 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணம்

----------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு<br>---------------------------------------------------- | முகாமைத்துவத்தின் கருத்துரைகள்<br>--------------------------------- | பரிந்துரை<br>--------------- |
|---|---|---|
| தொழில்நுட்ப மற்றும் புதுக்கண்டுபிடிப்புக்கான மத்திய நிலையங்களுக்கிடையே பகிர்ந்தளிப்பதற்கு ரூபா 1,198,800 முழுச் செலவிலான 12 கணனிகள் 2016 திசெம்பர் 30 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. ஆனால் 2019 ஆகஸ்ட் 09 ஆந் திகதி வரை இக்கணனிகள் சம்பந்தப்பட்ட நிலையங்களுக்கிடையில் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணனிகளை பகிர்ந்தளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | கணனிகளை பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் காலாவதியாவதற்கு காரணமாவதனால் திட்டமிட்டபடி தேவையான பொருட்களை மாத்திரம் கொள்வனவு செய்வற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் கொள்வனவு செய்யப்பட்ட பொருளினை தாமதமின்றி பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 வருட நடைமுறைத் திட்டத்தின் படி மீளாய்வாண்டில் 9,600 வர்த்தக சின்னங்களுக்கான பதிவுச் சான்றிதழ் வழங்குவதற்கு நிறுவனம் திட்டமிட்டிருந்த போதிலும், 5,192 சான்றிதழ்கள் மட்டும் வழங்கப்பட்டிருந்தன. அது நூற்றிற்கு 54 ஆகும். | குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான உத்தியோகத்தர் குழாம் ஏனைய கட்ட அலுவலிலும் ஈடுபட்டவண்ணம் சான்றிதழ் வழங்கப்பட்டமை தாமதத்திற்கு காரணமாகும். | வர்த்தக சின்னங்களினை பதிவு செய்யும் அலுவல் நாளதுவரை செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | நடைமுறைத் திட்டத்திற்கமைவாக மீளாய்வாண்டில் வெளியீட்டு உரிமை சம்பந்தமான அலுவல்களை கவனிப்பதற்கு தனியான அலகொன்றினை உருவாக்குவதற்கு தேவையான பௌதீக மற்றும் மனிதவள உட்கட்டமைப்பினை வழங்குவதற்கும் தரவு களஞ்சியமொன்று தாபிப்பதற்கும் IPAS முறைமையை மேம்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அக்காரியம் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | 2020 ஆம் ஆண்டு ஆகும் போது முடிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | நடைமுறைத் திட்டத்திற்கமைவாக செயற்பட வேண்டும். |

**4.2 உள்ளக கணக்காய்வு**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் நிறுவனத்தின் உள்ளக கணக்காய்வு அலுவல் அமைச்சின் உள்ளக பிரிவின் மூலம் செய்யப்பட்டதுடன் 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(i) இலக்க முகாமைத்துவ கணக்காய்வு திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியத்தின் அலுவல் தொடர்பான உள்ளக கணக்காய்வினை மேற்கொண்டு உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்திற்கான உள்ளக கணக்காய்வாளர் பதவியொன்றினை 2019.04.06 ஆந் திகதி கடிதம் மூலம் அங்கீகரித்துள்ளதுடன் 2019 வருடம் ஒதுக்கீடு இல்லாமையினால் 2020 அப்பதவிக்கான உத்தியோகத்தரொருவரை இணைத்துக் கொள்ளும் படி முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் ஆலோசனை வழங்கப்பட்டது. | சுற்றறிக்கையின் படி செயற்படல் வேண்டும். |